IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.90/2022
DEPOSITION OF WITNESS (PW2)

ஆரம்ப நேரம்:3.15p.m.

வா.சா.2 சாட்சி கண்ணன் த.பெ.பால்ச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 17.03.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது சொந்த ஊர் சித்தாலை ஆகும். வழக்குச் சொத்து எங்குள்ளது என்றால் சித்தாலையில் உள்ளது. வாதிகள், பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். வழக்குச் சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பட்டா மாறுதல் சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் வாதி, பிரதிவாதிக்கிடையே வழக்கு நடைபெற்று வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் வழக்கு விசாரணைக்கு நான் உடன் சென்றதால் தெரியும்.

2. மேற்படி விசாரணையில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு முடிவில் தாவா இடத்திற்குரிய பட்டாவானது பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் செய்ய திருமங்கலம் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்ட விபரம் எனக்கு நன்றாக தெரிந்தும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.

3. வாதி சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், நான் உள்ளூர்வாசி என்பதால் எனக்கு வழக்குச் சொத்தை பற்றிய விபரம் தெரியும். வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினரா என்றால் பங்காளிகள் ஆவார்கள். வழக்குச் சொத்து வாதிகளுக்கு எந்தவகையில் பாத்தியம் என்றால் ஒரு சொத்து பூர்வீக சொத்து மற்றும் ஒருசொத்து ஜெயராமன் என்பவரிடம் கிரையம் பெற்ற சொத்து ஆகும். மேற்படி ஜெயராமனின் பெயரில் வருவாய் ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

4. ஜெயராமன் பெயரில் உள்ள வருவாய்ஆவணங்களை நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ளார்களா என்று விபரம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நினைவில்லை. ஜெயராமன் பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் உள்ள வருவாய் ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், அதற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் தெரியாது.

5. UDR காலத்தில் தவறாக ஏற்பட்ட பட்டாவை வைத்து 1ம்வாதி 2ம்வாதிக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 1ம்வாதி சக்திவேல் பெயரில் நிலஉடமை மேம்பாட்டு திட்ட காலத்தில் ஏற்பட்ட பட்டாவானது பிழையானது என ஊர்ஜிதம் செய்து உத்தரவிடப்பட்ட நிலையில் தாவாச் சொத்துக்களை பொறுத்து 1ம்வாதிக்கு எவ்வித உரிமை இல்லை

என்பதால் 2ம்வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

6. வாதிகள் என்னுடைய பங்காளிகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் இந்த பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு கிரையபாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் முன்னோரான பொன்னுச்சாமித்தேவருக்கு கிரையப்பாத்தியப்பட்டு அவருடைய பெயரில் UDRதிட்டத்திற்கு முன்பாக வருவாய் ஆவணங்களில் பட்டா எண் 305 ஏற்பட்டது என்றும், மேற்படி பொன்னுச்சாமித்தேவர் அனுபவித்து வந்து அவருடைய காலத்திற்கு பின்பு அவருடைய மகன்களில் ஒருவரான செல்லப்பா என்பவருடைய பாகத்திற்கு கிடைக்கப்பெற்று மேற்படி செல்லப்பா என்பவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 3.32 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.